முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்.பொள்ளாச்சி

நாள்: 19.01.2026 , அ.வ.எண். 48/2012, வா.சா.2, மஞ்சுளாமணி, க/பெ. ராமராஜ்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

1) எனது தாத்தா எப்போது இறந்தார் என்றால் 1985 ம் ஆண்டு எங்களது வீடான எம்மேகவுண்டன்பாளையத்தில் இறந்தார், அப்போது எனக்கு வயது என்ன என்றால் நான் பிறக்கவேயில்லை. நான் திருமணம் செய்து கொண்டு நல்லட்டிபாளையம், தாமரைக்குளம், கிணத்துக்கடவு தாலுகாவில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் கூறியுள்ள விடுதலை பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன்.

2) மேற்படி பத்திரமானது 2003 ம் ஆண்டு எனது அப்பாவின் பெயருக்கு எனது சித்தப்பா பழனிச்சாமி, கிருஷ்ணசாமி ஆகியோர் எழுதிக்கொடுத்தார்கள். மேற்படி எனது சித்தப்பாக்கள் எழுதிக்கொடுத்த சொத்தானது எந்த அடிப்படையில் எனது தகப்பனாருக்கு வந்தது என்றால் சுப்பையத்தேவருக்கு பெருமாள் தேவர், கருப்பசாமி தேவர்,. பழனிச்சாமி தேவர், கந்தசாமி தேவர் ஆகியோர் சேர்ந்து எழுதிக்கொடுத்த கிரயத்தின் படி வந்த சொத்து ஆகும். மேற்படி கிரயப்பத்திரம் எந்த ஆண்டிற்கானது என்றால் 1983 ம் ஆண்டிற்கானது ஆகும்.

3) தாவா சொத்திற்கான பத்திரங்கள் தான் மேற்படி 1983 ம் ஆண்டிற்கான பத்திரம் என்றால் சரிதான். வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் செப்டிங் டேங்க் அமைந்துள்ள பகுதியானது எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது என்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி விடுதலை பத்திரத்திலும், கிரயப்பத்திரத்திலும் செப்டிக் டேங்க் அமைந்துள்ள இடத்தின் அளவு எவ்வளவு என்றால் 3 செண்ட் 60 அடி ஆகும். 3 செண்ட் 60 அடி இடத்தில் மேற்படி செப்டிக் டேங்க் அமைந்துள்ளது

ஒப்பம்/-(R. சுஜாதா)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி

உண்மைதான் என்றால் சரிதான். எனது தகப்பனார் வீடு கிழக்கு பார்த்த வீடு என்றால் சரிதான், மேற்படி வீட்டிற்கு முன்னால் தென்வடல் வீதி உள்ளது என்றால் சரியல்ல,. கிழமேல் ரோடு முன்வாசலை ஒட்டி அமைந்துள்ளது. எனது அப்பா வீட்டிற்கு வடபுறமாக எனது பெரியப்பா வெள்ளியங்கிரி தேவர் வீடு உள்ளது என்றால் சரிதான்,.

4) வெள்ளியங்கிரி தேவர் வீடு கிழக்கு பார்த்து உள்ளது என்றால் சரிதான். எனது அப்பா வீட்டிற்கு முன்புறம் 1 அடி அகலத்தில் திண்ணை உள்ளது என்றால் சரிதான். திண்ணையை ஒட்டி முன்வாசல் உள்ளது என்றால் சிறிதளவிற்கு தான் திண்ணையை ஒட்டி முன்வாசல் உள்ளது. எனது பெரியப்பா
வெள்ளியங்கிரி தேவர் வீட்டிற்கு தென்வடல் வீதி வழியாக மெயின் ரோட்டிற்கு வருவார் என்றால் தென்வடல் வீதி கிடையாது நாங்கள் நடந்து கொள்வதற்காக சிறிது இடம் விட்டு வீடு கட்டியுள்ளோம். நான் அவ்வாறு சொல்வது பொய் என்றும் எனது தகப்பனாரே அவரது சாட்சியத்தில் மேற்படி சங்கதிகளை ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

5) எனது அப்பாவின் கிழக்கு பார்த்த வீட்டில் எத்தனை அறைகள் உள்ளது என்றால் 4 அறைகள் உள்ளது. மேற்படி வீடு எத்தனை செண்ட் இடம் என்றால் சரியாக எனக்கு அளவு தெரியாது. சுமார் 2 1/4 செண்ட்டில் கட்டியிருப்பார். எந்த வருடம் மேற்படி வீடு கட்டப்பட்டது என்றால் 2003 ம் ஆண்டு கட்டப்பட்டது. எம்மேகவுண்டன் பாளையத்திற்கு எந்த ஊர் பஞ்சாயத்து என்றால் செட்டிக்காபாளையம் பஞ்சாயத்து ஆகும். எனது அப்பா வீட்டிற்கு மின்கட்டணம், சொத்து வரி செலுத்திவருகிறோம் என்றால் சரிதான். எனது அப்பா வீடு கட்டும்

ஒப்பம்/-(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

போது செட்டிக்காபாளையம் பஞ்சாயத்தில் அனுமதி வாங்கித்தான் மேற்படி வீட்டை கட்டினார் என்றால் அப்போது நான் சிறு குழந்தை என்பதால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் அவ்வாறு சொல்வது பொய் என்றும் இவ்வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு வந்து சாட்சியம் அளித்துக் கொண்டிருக்கும் நிலையில் எனக்கு தெரியாது என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல.

6) நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் உள்ள சொத்து விவரங்கள் நான் சொல்லித்தான் எழுதப்பட்டது என்றால் சரிதான். 3 செண்ட் 60 சதுர அடி இடம் பட்டாப்படி பாத்தியம் என்று கூறியுள்ள நிலையில் 3 செண்ட் 60 அடிக்குள் எவ்வளவு அளவு செப்டிக் டேங்க் கட்டப்பட்டுள்ளது என்று பட்டாவில் உள்ளதா என்றால் பட்டாவில் இல்லை. கிழக்குப்பார்த்து கட்டியுள்ள வீட்டைத்தவிர தென்புறத்தில் எனதுஅப்பாவிற்கு எவ்வித இடமும் கிடையாது என்றால் சரியல்ல. மேற்படி இடத்தினை அவர் விட்டுவிட்டு தான் வீடு கட்டியுள்ளார்.

7) செப்டிக் டேங்க் கட்டியுள்ளது பிரதிவாதியின் முன்வாசல் இடத்தில் வடகோட்டில் கட்டியுள்ளோம் என்றால் சரியல்ல. வா சா ஆ 2 ல் சொத்து விவரத்தில் ரங்கசாமி தேவர் வீட்டிற்கு முன்வாசலுக்கு வடக்கு , வெள்ளிங்கிரி தேவர் வீட்டிற்கும் தெற்கு, என்று கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் ரங்கசாமி தேவர் வீட்டிற்கு முன்வாசலுக்கு வடக்கில் தான் எனது அப்பாவின் வீடு என்று கண்டுள்ளது என்றால் சரிதான். எனது அப்பாவின் வீட்டு காலை எண் என்ன என்றால் 521/24 ஆகும். வா சா ஆ 1 கிரய பத்திரத்தில் சொத்து விவரத்தில் ரங்கசாமி தேவர் வீட்டிற்கு முன்வாசலுக்கும் வடக்கு, என்று தான்

ஒப்பம்/-(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

கண்டுள்ளது என்றால் சரிதான்.

8) ரங்கசாமி தேவர் வீட்டிற்கு முன்வாசலுக்கும் வடக்கு அதிலிருந்து தான் எனது அப்பாவின் சொத்து ஆரம்பிக்கிறது என்றால் பத்திரப்படி சரிதான். வா சா ஆ 1 ஆவணத்தில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் ஓரளவிற்கு தெரியும். மேற்படி ஆவணத்தில் சீமை ஓடு போட்ட வில்லை வீடு என்றுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் இடத்தின்அளவு 1368 சதுர அடியில் சரிபாதி 684 சதுர அடி என்றுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் கட்டிடம் கட்டப்பட்டுள்ள பரப்பளவும் தன்மையும் என்ற இடத்தில் 15 x 10 சதுர அடியில் சரிபாதி 75 சதுர அடி என்று கண்டுள்ளது என்றால் சரிதான்.,

9) மேற்படி ஆவணத்தில் பாத்ரூம் கட்டப்பட்டுள்ள விவரம் இல்லை என்று தான் கண்டுள்ளது என்றால் சரிதான். வா சா ஆ 1, வா சா ஆ 2 ஆவணங்களில் பாத்ரூம் இல்லை என்றுதான் கண்டுள்ளது என்றால் சரிதான். 2010 ம் ஆண்டு தான் செப்டிக் டேங்க் கட்டப்பட்டது. செப்டிக் டேங்க் கட்டுவதற்கு எனது அப்பா பஞ்சாயத்தில் அனுமதி வாங்கினாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. பிரதிவாதியின் இடத்தில் எனது தகப்பனார் ஆக்கிரமிப்பு செய்து செப்டிக் டேங்க் கட்டியதால் தான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. எங்களுடைய இடத்தில் தான் செப்டிக் டேங்க் கட்டப்பட்டுள்ளது. செப்டிக் டேங்க் எவ்வளவு அளவிற்கு கட்டப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சுமார் 6 அடி அளவிற்கு கட்டப்பட்டிருக்கும்.

10) செப்டிக் டேங்க் கட்டப்பட்டுள்ள இடம் எனது அப்பாவிற்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் கேட்டுள்ளாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

ஒப்பம்/-(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

எனது அப்பா என்ன வழக்கு தாக்கல் செய்து பரிகாரம் கேட்டுள்ளார் என்ற விவரம் தெரிந்து தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். எனது அப்பா நீதிமன்றத்தில் எப்போது வழக்கு தாக்கல் செய்தார் 2012 ம் ஆண்டு ஆகும். 2012 ம் ஆண்டிலிருந்து வழக்கு நடக்கும் விவரம் எனக்கு தெரியும் என்றால் தெரியும். ராமசாமி தேவர், பேச்சியம்மாள் எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது பெரியப்பா, பெரியம்மா ஆவார்கள். அவர்கள் எவ்வளவு நாட்களாக வெளியூரில் குடியிருந்து வருகிறார்கள் என்ற விவரம்எனக்கு தெரியாது என்றால் எனக்கு நினைவு தெரிந்த நாள் முதல் அவர்கள் வெளியூரில் தான் வசித்து வருகிறார்கள். நான் அவ்வாறு சொல்வது பொய் என்றும் வேலைக்காகத்தான் அவர்கள் வெளியூர் செல்வார்கள் என்றால் சரியல்ல.

11) நான் பட்டாப்படி தான் எனது அப்பா இடத்தில் செப்டிக் டேங்க் உள்ளது என்று கேட்கிறேன் என்றால் பத்திரத்தில் கண்ட அளவுகளுக்குள் தான் பட்டாவிற்கான அளவுகளும் உள்ளது. நான் அவ்வாறு சொல்வது பொய் என்றால் சரியல்ல. என்னுடைய பிரமாண பத்திரிக்கையில் எந்த பத்திரத்தின் அடிப்படையில் செப்டிக் டேங்க் அமைந்துள்ளது என்று நான் கூறவில்லை என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்கள் எனது அப்பா தாக்கல் செய்துள்ள வழக்கிற்கு ஆதரவாக சொல்லியுள்ள பொய் விவரங்கள் என்றால் சரியல்ல. எனது அப்பா வீட்டின் கிழமேல் சுவரின் அத்து தான் எனது அப்பாவிற்கான இடம் என்றால் சரியல்ல முன்வாசல் வரை எனது அப்பாவிற்கு இடம் உள்ளது.

ஒப்பம்/−(R. சுஜாதா)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி